DINAKARAN

29 MAY 2022

PAGE 6

# கியூட் - யூஜி தேர்வுக்கு விண்ணப்பிக்க கால அவகாசம் நீட்டிப்பு

## புதுவை பல்கலைக்கழகம் தகவல்

**புதுச்சேரி, மே 29:** புதுச்சேரி பல்கலைக்கழக உதவி பதிவாளர் மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

தேசிய தேர்வு முகமையானது பல்கலைக்கழகங்களுக்கான பொது நுழைவுத் தேர்வுக்கு (கியூட்-யூஜி) விண்ணப்பிக்கும் கடைசி நாளாக வரும் 31ம் தேதி இரவு 9 மணி வரை நீட்டித்துள்ளது. இதன் மூலம் புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தின் 5 ஆண்டு ஒருங்கிணைந்த முதுநிலை படிப்புகளுக்கு மாணவர்கள் மீண்டும் விண்ணப்பிக்க வாய்ப்பு கிடைத்துள்ளது. இத்தேர்வுக்கு *https://cuet.samarth.ac.in/.* என்ற இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம்.

இதுதொடர்பான விவரங்கள் புதுவை பல்கலைக்கழகத்தின் *www.pondiuni.edu.in/admissions-2022-23/* என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.